## வடகிழக்கு பருவமழை:

# முதல்வர் மு.க.ஸ்டாலினின் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்!

ஆங்கில நாளேடுகள் படப்பிடிப்பு!




# சேலம் மாவட்டத்தில் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம்!

## மாவட்ட ஆட்சித்தலைவர் தகவல்!

சேலம், அக்.23-

முதலமைச்சர் அவர்களால் "உங்களுடன் ஸ்டாலின்" திட்டம் 15.07.2025 அன்று தொடங்கி வைத்தார்கள். சேலம் மாவட்டத்தில் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் அவர்களால் சேலம் மாநகராட்சி, சூரமங்கலம் மண்டலத்தில் தொடங்கி வைக்கப்பட்டது. "உங்களுடன் ஸ்டாலின்" என்ற திட்டத்தின் கீழ் சேலம் மாவட்டத்தில் உள்ள அனைத்து நகர்ப்புற மற்றும் ஊரகப் பகுதிகளில் 15.07.2025 முதல் 15.11.2025 வரை 432 சிறப்பு முகாம்கள் திட்டமிடப்பட்டு பொது மக்களிடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு தீர்வுகள் காணப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில், 23.10.2025 அன்று மேட்டூர் நகராட்சிக்குட்பட்ட 25, 26, 28 - வார்டுக்குட்பட்ட பகுதிகளுக்கு மேட்டூர் அணை சி.எஸ்.ஐ. அரங்கத்திலும், கீரிப்பட்டி பேரூராட்சி 9, 10, 11, 12, 13, 14, 15- வது வார்டுக்குட்பட்ட பகுதிகளுக்கு கீரிப்பட்டி முக்கோண பேருந்து நிறுத்தம் அருகிலும், நகர்ப்புறத்தை ஒட்டியுள்ள கிராம ஊராட்சி, புள்ளா கவுண்டம்பட்டி அக்ரஹாரம் பகுதிக்கு புள்ளா கவுண்டம் பட்டி அக்ரஹாரம் பிரம்மஸ்ரீ சமுதாய கூடத்திலும், வீரபாண்டி ஊராட்சி ஒன்றியம், பெரியசீரகபாடி பகுதிக்கு கிருபானந்த வாரியர் பொறியியல் கல்லூரி கலையரங்கத்திலும், கெங்கவல்லி ஊராட்சி ஒன்றியம், உலிபுரம், ஜங்கமசமுத்திரம் பகுதிகளுக்கு உலிபுரம் நாயக்கர் மஹாலிலும், தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியம், செலவடை, ஆரியம்பட்டி பகுதிகளுக்கு செலவடை ஓங்காளியம்மன் கோவில் மண்டபத்திலும் முகாம் நடைபெறவுள்ளது.

அதேபோன்று, 24.10.2025 அன்று சேலம் மாநகராட்சி, அஸ்தம்பட்டி மண்டலம் வார்டு 30 க்குட்பட்ட பகுதிகளுக்கு சேலம் பழைய பேருந்து நிலையம், நேரு கலையரங்கத்திலும், தாரமங்கலம் நகராட்சி வார்டு 19, 20, 21 - க்குட்பட்ட பகுதிகளுக்கு தாரமங்கலம் செங்குந்தர் திருமண மண்டபத்திலும், பனமரத்துப்பட்டி பேரூராட்சி 8, 9, 10, 11, 12, 13, 14, 15 - வது வார்டுக்குட்பட்ட பகுதிகளுக்கு பனமரத்துப்பட்டி 13 வது வார்டு ஒண்டிக்கடை சமுதாய கூடத்திலும், நகர்ப்புறத்தை ஒட்டியுள்ள கிராம ஊராட்சி, வெள்ளக்கல் பட்டி பகுதிக்கு வெள்ளக்கல்பட்டி ஊராட்சி திருமண மண்டபத்திலும், சேலம் ஊராட்சி ஒன்றியம், மஜ்ராகொல்லபட்டி, வட்டமுத்தாம்பட்டி பகுதிகளுக்கு வட்டமுத்தாம்பட்டி சமுதாய கூடத்திலும், கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியம், எருமைப்பட்டி பகுதிக்கு எருமைப்பட்டி சமுதாய கூடத்திலும் முகாம் நடைபெறவுள்ளது.

சேலம் மாவட்ட பகுதிகளில் உள்ள பொதுமக்கள் இச்சிறப்பு முகாம்களை உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, தெரிவித்துள்ளார்.

### வடகிழக்கு பருவ மழை தீவிரம் – தமிழ்நாட்டில்

# சென்னை உட்பட 9 மாவட்டங்களுக்கு ஆரஞ்சு எச்சரிக்கை!

## அணைகள் – ஏரிகள் வேகமாக நிரம்புகின்றன!

சென்னை, அக்.23-

தமிழ்நாட்டில் 9 மாவட்டங்களுக்கு மிக கனமழைக்கான ஆரஞ்சு எச்சரிக்கை விடுக்கப்பட்டு உள்ளது. மீனவர்கள் கடலுக்குள் செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டு உள்ளனர்.

தமிழகத்தில் கடந்த சில தினங்களாக வடகிழக்கு பருவமழை பரவலாக பெய்து வருகிறது. இந்த நிலையில் தென்மேற்கு வங்கக்கடல் பகுதியில் நேற்று முன்தினம் அதிகாலை 5.30 மணிக்கு குறைந்த காற்ற ழுத்த தாழ்வு பகுதி உருவானது. அடுத்த 3 மணி நேரத்துக்குள் அதாவது காலை 8.30 மணிக்கு அது காற்ற ழுத்த தாழ்வு பகுதியாக வலுவடைந்தது. இதன் காரணமாக தமிழகத்தின் வட மாவட்டங்களில் பரவலாக மழை பெய்தது.

காற்றழுத்த தாழ்வு பகுதி மேற்கு வடமேற்கு திசையில் நகர்ந்து தமிழக கடலோர பகுதியை நெருங்கி நீடித்தது.

இதற்கிடையே காற்ற ழுத்த தாழ்வு பகுதி நேற்று முன்தினம் இரவு மேலும் சற்று வலுவடைந்தது. நேற்று (புதன்கிழமை) மாலைக்குள் அது காற்ற ழுத்த தாழ்வு மண்டலமாக அதாவது புயல் சின்னமாக வலுவடையும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்து உள்ளது.

இதன் காரணமாக வட மாவட்டங்களில் இன்று பெரும்பாலான பகுதிகளில் மழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் கூறி உள்ளது.

புயல் சின்னம் வலுவான நிலையில் நீடிப்பதால் திருவள்ளூர், ராணிப்பேட்டை மாவட்டங்களுக்கு ரெட் அலர்ட் விடுக்கப்பட்டு உள்ளது. இந்த 2 மாவட்டங்களிலும் நேற்று 20 சென்டி மீட்டருக்கு மேல் அதி கனமழை பெய்யும் வாய்ப்பு உருவாகி இருக்கிறது. இதையடுத்து இந்த மாவட்டங்களில் மழை பாதிப்பு ஏற்பட்டால் மக்களுக்கு உதவ அதிகாரிகள் உஷார் படுத்தப்பட்டு உள்ளனர்.

இதே போன்று சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, வேலூர், திருவண்ணாமலை, திருப்பத்தூர், கிருஷ்ணகிரி, தர்மபுரி, சேலம் ஆகிய 9 மாவட்டங்களுக்கு மிக கனமழைக்கான ஆரஞ்சு எச்சரிக்கை விடுக்கப்பட்டு உள்ளது.

கோவை, ஈரோடு, நீலகிரி, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, கடலூர், பெரம்பலூர், திருச்சி, தேனி, தென்காசி, திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய 12 மாவட்டங்களுக்கும்

புதுச்சேரிக்கும் கனமழைக்கான மஞ்சள் எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

புயல் சின்னம் தமிழக கடலோர பகுதியை நெருங்கி வருவதால் கடலோர பகுதிகளில் சூறாவளி காற்று வீசக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது. மீனவர்கள் இன்றும், நாளையும் கடலுக்குள் செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டு உள்ளனர்.

**ஏரிகளின் நீர் மட்டம் மழை அளவு!**

தமிழகத்தில் நேற்று மழை பொழிவு விவரங்களை சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ளது. அதன் விவரம் வருமாறு: விழுப்புரம் மாவட்டம் வானூர் 18.4 செ.மீ., விழுப்புரம் 16.8 செ.மீ., திருவள்ளூர் மாவட்டம் ஊத்துக்கோட்டை 16.7 செ.மீ., கடலூர் மாவட்டம் கொத்தவாச்சேரி 16.6 செ.மீ., வாணமாதேவி 16.5 செ.மீ., விழுப்புரம் மாவட்டம் விடூர் 16.1 செ.மீ., கடலூர் மாவட்டம் சேத்தியாத்தோப்பு 13 செ.மீ., பரங்கிப்பேட்டை 12.5 செ.மீ., புவனகிரி 12.3 செ.மீ.,

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி 12.3 செ.மீ., திருவள்ளூர் மாவட்டம் ஆவடி 11.7 செ.மீ., திருவாலங்காடு 11.2 செ.மீ., விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் 10.3 செ.மீ., ராணிப்பேட்டை மாவட்டம் களவாய் 9.94 செ.மீ., செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் 9.82 செ.மீ., விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் 9.4 செ.மீ.,

கடலூர் மாவட்டம் பண்ருட்டி 9 செ.மீ., விழுப்புரம் மாவட்டம் எலிஸ் அணைக்கட்டு 9 செ.மீ., திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டி 8.9 செ.மீ., காஞ்சீபுரம் மாவட்டம் ஸ்ரீபெரும்புதூர் 8.84 செ.மீ., ராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு 8.83 செ.மீ., திருவண்ணாமலை மாவட்டம் தண்டறை அணைக்கட்டு 8.6 செ.மீ. கள்ளக்குறிச்சி மாவட்டம் சங்கராபுரத்தில் 8.5 செ.மீ. மழையும் பதிவாகியுள்ளது. இதேபோல், 98 இடங்களில் 4 மி.மீ. வரை மழை பதிவாகியுள்ளது.

ஏரிகளின் நீர் இருப்பு விவரம்: தமிழ்நாட்டில் மொத்தம் உள்ள 38 மாவட்டங்களிலும் 14,141 ஏரிகள் உள்ளன. அதிகபட்சமாக கன்னியாகுமரி மாவட்டத்தில் 2,040 ஏரிகளும், குறைவாக நீலகிரி மாவட்டத்தில் ஏரிகள் எதுவும் இல்லை.

இந்த ஏரிகளின் சராசரியாக 50 சதவிகிதத்திற்கும் அதிகமான அளவில் நீர் நிறைந்துள்ளன.




வேலூர் மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு குழு கூட்டம் குழுவின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த் தலைமையில் நடந்தது. உடன் மாவட்ட ஆட்சியர் வே.இரா.சுப்பு லட்சுமி, மாநகர செயலாளர் ப. கார்த்திகேயன் எம்.எல்.ஏ, குடியாத்தம் சட்ட மன்ற உறுப்பினர் அமலு விஜயன், ஆம்பூர் சட்டமன்ற உறுப்பினர் அ.செ. வில்வநாதன், மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார் மற்றும் துறை சார்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



உளுந்தூர்பேட்டை தொகுதி, கே.வி.முருகன் தலைமையில், வடக்கு மாவட்ட கழக செயலாளர் தா.உதயசூரியன் எம்.எல்.ஏ மற்றும் தொகுதி பொறுப்பாளர் ஸ்ரீதரன் ஆகியோர் முன்னிலையில், பாண்டுர் ஊராட்சியில் இருந்து மாற்றுக் கட்சியைச் சேர்ந்த சிவராஜ், ராஜா, பாலாஜி, முரளி, இளையராஜா, புருஷோத், ராஜ துரை உள்ளிட்ட 15 பேர் கழகத்தில் இணைந்தனர். அப்போது ஆ.ஜெ.மணிக்கண்ணன் எம்.எல்.ஏ, எஸ்.அருணராஜ், பி.வி.சுந்தரமூர்த்தி, சக்திவேல், பாக்கியராஜ், ராதா கிருஷ்ணன் மற்றும் ஒன்றிய கழக நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்.